பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 28 வெள்ளிக்கிழமை (14.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 288

# அரசியல் தீர்வுக்கான நகல் யோசனை இந்தியத் தரப்புக்கு கையளிக்கப்படும்

## மன்மோகன்சிங்கிடம் மஹிந்தரே நேரில் வழங்குவார்

கொழும்பு, செப்ரெம்பர் 14





இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமது அரசு வைத்திருக்கும் யோசனைத் திட்டத்தின் நகல் பிரதி ஒன்றை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நியூயோர்க்கில் வைத்துக் கையளிப்பார் என விடயமறிந்த வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

இம்மாதம் கடைசி வாரத்தில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக இலங்கை,இந்திய நாடுகள் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் நியூயோர்க் செல்லுகின்றனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ (10ஆம் பக்கம் பார்க்க)

### தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கொலை அச்சுறுத்தல்

சென்னை,செப்.14

தமிழக முதல்வர்மு.கருணாநிதிக்குகொலை அச்சுறுத்தல் விடுக்கபபட்டுள்ளது.

'அல் ஜிம்மா மதானி' என்ற இயக்கமே இந்த கொலை அச்சுறுத்தலை விடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக இணைக்கப்படவுள்ள முஸ்லிம் காவல்துறையினரின் வயதெல்லையை 24 இலிருந்து 29 ஆக உயர்த்துமாறு அந்த (10ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் புளொட் அலுவலகத்தில் நேற்றுத் தேடுதல்

மட்டக்களப்பு,செப்.14

மட்டக்களப்பு, வவுணதீவில் அமைந்துள்ள புளொட் அலுவலகம் நேற்றுக் காலை 8 மணியளவில் அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அங்கிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது என்று அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (1)

## புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலையிலும் மாலையிலும் பல தடவைகள் விமானக் குண்டுவீச்சு!

### பாடசாலை மாணவர்கள் அல்லோல கல்லோலம்!!

கிளிநொச்சி, செப். 14

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுக் காலையிலும் மாலையிலுமாக மிக் விமானங்கள் 15 இற்கு மேற்பட்ட குண்டுகளை வீசித் தாக்கின.

'மிக் - 27' ரக விமானங்கள் நான்கு, புதுக்குடியிருப்பில் மக்கள் குடியிருப்பை அண்டிய பிரதேசத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசின. இதனால் பொது மக்கள் அவலங்களுக்கு ஆளாகினர்.

முதலில் காலை 8.25 மணியளவில் விமானத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட வேளையில் பாடசாலைகளில் காலை ஒன்று கூடல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதனால் மாணவர்கள் பதற்றத்துடன் அங்கும் (10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையான பழ. நெடுமாறன் 2 ஆவது நாளாக உண்ணாவிரதம்



கொழும்பு, செப். 14

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உணவு, மருந்துப் பொருள்களை அனுப்ப அனுமதியளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரான ப. நெடுமாறன் கடந்த 2 நாள்களாக சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றார்.

சென்னை கோயம்பேட்டில் வாகனத் திருத்துமிட வளாகம் ஒன்றினுள் அமர்ந்து பழ. நெடுமாறன் இந்த உண்ணாநிலைப் போராட்டத்தை நேற்று வியாழக் கிழமைகாலை ஆரம்பித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கருணாநிதி நெடுமாறனுக்குக் கடிதம்

### மத்திய அரசின் பதிலேதேவையென நிராகரிப்பு

சென்னை,செப்.14

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனுக்கு தமிழகமுதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்றிரவு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

பிந்திய செய்தி

இந்த உண்ணாவிரதம் உடல் நலத் துக்கு ஏற்றதல்ல. தாங்கள் எடுத்துள்ள முயற்சிகளை தமிழக அரசின் சார்பில் வெற்றிபெற வைத்திட நானும் முயற்சி மேற்கொள்ளுகிறேன். இந்த வார்த்தையை ஏற்று உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்என்று அக்கடிதத்தில் கருணாநிதி கேட்டுள்ளார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன் ஊடாக கவிஞர் காசி ஆனந்தன்மூலம் நெடுமாறனுக்கு இக்கடிதம் கையளிக்கப்பட்டது.

கலைஞரின் தனிப்பட்ட கடிதம் தமக்குத் தேவையில்லை. யாழ்ப்பாண மக்களுக்கு உணவு, மருந்துப் பொருள்களை அனுப்ப அனுமதிக்கிறோம் என்ற மத்திய அரசின் உறுதிமொழிக்கடிதம்தான் தமக்குத் தேவை எனநெடுமாறன்தெரிவித்து உண்ணாவிரதப்போராட்டத்தைத் தொடர்கிறார்.(1)

## கஞ்சிகுடிச்சாற்றுப் பகுதியில் 10 அதிரடிப்படையினர் பலி

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் தகவல்

அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் கடந்த இரு நாள்களாக இடம்பெற்ற மோதலின்போது பத்து விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் நேற்றுக்காலை சுமார் 10.15 மணியளவில் விடுதலைப்புலிகள் நிலை கொண்டுள்ள காட்டுப் பகுதியை நோக்கி ஊடுருவ முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திற்கு பெருமை தேடித்தந்த மானிப்பாய் மகளிர் கல்லூரிச் சாதனையாளர்



யாழ்ப்பாணம்,செப்.14

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக் கிடையில் நடைபெற்ற உடற் பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனை படைத் துள்ளனர்.

சாதனை புரிந்த மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்றுகல்லூரியில் இடம் பெறவுள்ளது.

வடமாகாண பெண்கள் அணி ஒன்று தேசியமட்டத்தில் பங்குபற்றி முதலிடம் பெற்றிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம்இடத்தைப் பெற்றுக் கொண்ட மானிப்பாய் இந்து மகளிர்கல்லூரி மாணவிகள் யாழ். குடாநாட்டின் முக்கிய பிரமுகர்கள் பலராலும் பாராட்டுப் பெற்றுவருவதுடன், பரிசுப் பொருள்ளும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

மாணவிகளின் சாதனைகளைப் பாராட்டி யாழ். அரச அதிபர் கே.கணேஸ் வாழ்த்துச் செய்தி ஒன்றை நேற்று (10ஆம் பக்கம் பார்க்க)

### மறு அறிவித்தல் வரை இரவு 9 முதல் ஊரடங்கு

யாழ்ப்பாணம்,செப்.14

இன்று தொடக்கம் மறுஅறிவித்தல் வரை குடாநாடு முழுவதிலும் இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும். பலாலிப்படைத்தலைமையகம் நேற்றிரவு இதனை அறிவித்தது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2007

ஆவணி மாதம் 28ம் நாள் 14.09.2007 சுக்கிரவாரம் முற்பகல் 10 மணி கொடியேற்றம் (துவஜாரோஹணம் - சூரிய பரிதிச் சேவை) மாலை: மஹாமாகரம்பம் அன்னச்சேவை

| | | | |
|---|---|---|---|
| 15.09.2007 | சனி | காலை: கேடகம் | மாலை: சேஷ சயனச் சேவை |
| 16.09.2007 | ஞாயிறு | காலை: கேடகம் | மாலை: கருடசேவை |
| 17.09.2007 | திங்கள் | காலை: கேடகம் | மாலை: அனுமச் சேவை |
| 18.09.2007 | செவ்வாய் | காலை: கேடகம் | மாலை: பூந்தண்டிகைச் சேவை |
| 19.09.2007 | புதன் | காலை: கேடகம் | மாலை: கஜேந்திர சேவை |
| 20.09.2007 | வியாழன் | காலை: கேடகம் | மாலை: சப்பரம் வெண்ணெய் தாளி சேவை |
| 21.09.2007 | வெள்ளி | காலை: கருடசேவை | மாலை: அஸ்வாருட சேவை |
| 22.09.2007 | சனி (முதலாம் சனிவாரம்) காலை 8 மணி வசந்தமண்டப பூஜை முற்பகல்10 மணி இரதோற்சவம் முற்பகல் 11.30 மணி இரதவரோஹணம் நண்பகல் 12 மணி மஹா ஆசீர்வாதம் மாலை: கருடசேவை | | |
| 23.09.2007 | ஞாயிறு (ஏகாதசி) காலை 8 மணி வசந்த மண்டபப் பூஜை முற்பகல் 9.30 மணி சந்திர புஷ்கரணியில் தீர்த்தோற்சவம் திருவோண தீபபூஜை மஹாயாக கும்பாபிஷேகம் மாலை: துவஜாவரோஹணம் சந்திரபிறைச் சேவை | | |
| 24.09.2007 | திங்கள் | காலை: காசி யாத்திரை நிச்சயதார்த்தம் | மாலை: திருக்கல்யாணம், பூந்தண்டிகைச் சேவை |
| 25.09.2007 | செவ்வாய் | மாலை: திருவூஞ்சல் பூந்தொட்டிச் சேவை | |
| 26.09.2007 | புதன் | மாலை: வதிரி விருட்ஷ யோக நாராயண உற்சவம் | |
| 27.09.2007 | வியாழன் | காலை: பிராயச்சித்த அபிஷேகம் வாகன பூஜை மாலை: ஆஞ்சநேயர் அபிஷேகம் பொங்கல் உற்சவம் | |

★ கால சூழ்நிலைக்கேற்ப பூஜை நேரங்கள் மாற்றப்படலாம்

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
E-Mail: Srivengadsan@Srivengadsar.com
Web: www.Srivengadsan

ஆதீன மஹாசபை
தொ.பே 0212222476

விளம்பர அனுசரணை:
பட்டாபி படமாடம், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(64841)


## யாழ். செயலகத்தில் இலக்கியப் பட்டறை

பாடசாலை மாணவர்களுக்கிடையே தமிழ் இலக்கிய ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இலக்கிய பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 45 மாணவர்கள் இந்தப் பட்டறையில் பங்கு பற்றவிருக்கின்றனர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (அ-1)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் ந. குணரெட்ணம் அவர்களின் பாசமிகு மகன் செல்வன் மன்மோகன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி-63684) புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம்.

WESTERN UNION ® வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் பணப் பரிமாற்றம் ®

WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN IO இலக்கங்கள்) கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் பரிசில்களையும் பெற்றுக் கொள்ள

SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD, JAFFNA.
T.P.: 021- 222 2670, 5392
Fax: 021- 2223214
e.Mail: srimurugan @ eureka.lk
(C/53261)

## அறிவாலயத்தின் அஞ்சலி



எமது ஆயுள் உறுப்பினரும்,
ஐப்பசிமாத பத்திரிகை அன்பளிப்பாளருமாகிய
அமரர் ப.ஆனந்தமகேஸ்வரன்
அவர்களுக்கு இதய
அஞ்சலிகள் சமர்ப்பணம்.

இணுவில் அறிவாலயம்.
(64836)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09 ★ 06 ★ 1915
மறைவு 16 ★ 08 ★ 2007

அமரர் மகேஸ்வரி நடராசா

16.08.2007 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.09.2007) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

97/30, A.V. வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (64846)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

சபாரத்தினம் கிருஷ்ணமூர்த்தி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாக வும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சபாரத்தினம் கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் கட்டட பொறியியலாளர், இ. மி. சபை) 12.09.2007 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - கனகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற யுகலக்ஷிமியின் அன்புக் கணவரும் சத்தியமூர்த்தி (அமரர்), சத்தியேஸ்வரி, கிருபாமூர்த்தி, சத்தியபகவதி, சத்தியராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயலக்ஷ்மி, பரமானந்தம், தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான லக்ஷ்மி காந்தன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள்.
தொடர்பு: 2738469 - 2505476, 0779260502.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மலர்வு 19 ★ 10 ★ 1958
உதிர்வு 15 ★ 08 ★ 2007

திருமதி ஜெயலட்சுமி தயாபரன் (துரை)

15.08.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் சபிண்டீகரண கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (14.09.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

அத்தருணம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜபதி,
சுதுலை வடக்கு,
மானிப்பாய். (64847)
குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகேசப்பிள்ளை கதிர்காமசேகரம்
(இளைப்பாறிய அதிபர்)
மலர்வு: 20.05.1920
திதி: திருதியை
உதிர்வு: 30.08.2003

நான்கு அண்டுகளாக
அழுது அழுது ஆறாக்கண்ணீர்
பெருகி நிற்கும் என்றும் மறவா

"சாந்திநிகேதனம்",
அளவெட்டி. (64845)
குடும்பத்தினர்.

## பொருளியல் கல்லூரி யாழ் - இணுவில்

A/L 2008 Paper Class
வணிகக்கல்வி - V. முரளி
(B.B.A.F.M. SPL)
யாழ். நகரில்
பிரிவு I - சனி - ஞாயிறு 7,00 மணி
பிரிவு II செவ் - வியாழன் 3.30
இணுவிலில் - புதன் 3.30 -5.00

## மரண அறிவித்தல்



நீக்கிலாப்பிள்ளை சந்தியாப்பிள்ளை

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை சந்தியாப்பிள்ளை நேற்று (13.09.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அற்புதம்மாவின் அன்புக் கணவரும் பற்றிக், தேவகுமாரி, தேவராணி, தேவறம்பை, விஜயகுமாரி, விஜயகுமார், இராசகுமார், காலஞ்சென்ற வசந்தகுமார் (காந்தி), சிறிகாந்தகுமார், அற்புதராணி, உதயகுமார், சூரியகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜினிதேவி, றொபட், அன்ரன், காலஞ்சென்ற தியாகராஜா, றெஜினஸ், கில்டா, மடோனா, மலர், ஜசி, ஜெயபாலன், டிலோ, யேசுரெட்ணம் ஆகியோரின் மாமனும் பற்றிஷன், டிஷாந்தினி, ஷாஜனி, அருள்நாதன், பிரதீபன், அபிபா, அமுது, மேனகா, டயானா, ஜெறோம், காலஞ்சென்ற யோசன், ரோமாறியோ, அலிஸ்ரன், ஸ்ரெப்னி, டெப்னி, றொசான், நீஷான், சுமன், சுரேஸ், டிலாணி, நிரோஜன், கார்லோஸ், கிளவ்டியா, பிரியங்கா, ஒலிவந்ததாரணி, கவின், நிஷாணி ஆகியோரின் பேரனும் சைமினி, கியூரி, ஜஸ்வினா, துவாரகன், ஒலிவியா ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியம், அன்னம்மா, அக்கினேஸ் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சிலுவைராசா மற்றும் லூயிஸ், காலஞ்சென்ற அகஸ்டின் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.09.2007) சனிக்கிழமை முற்பகல்9மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (64856)
தகவல்: எஸ்.பற்றிக் (மகன்).

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்
தயானந்தன் கேசவன்
தோற்றம் 17-04-1990
மறைவு 14-09-2006

ஆண்டொன்று சென்றாலும்
அருமை நினைவுகள் அழிவதில்லை
நீர் எம்மை விட்டு இப்பூவுலகிலிருந்து
விண்ணுலகம் சென்று எம்மை
புன்னகையுடனும் அன்புடனும் பார்க்கின்ற
அந்தப் பூமுகம் தான் எமைவிட்டு
அகன்று விடுமோ,
உம்வதனம் எம்முன்னே நிழல் ஆடுகிறது
நூறு ஆண்டு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காது உம் நினைவுகள்
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (64745)
தந்தை - தாய்
சகோதர - சகோதரிகள்.

## இரங்கல் திருப்பலி நிகழ்வு

அருட் தந்தை B.F. பொனிபஸ்



எமது முன்னாள் பங்குத் தந்தையும் இளவாலை மறைக்கோட்ட முதல்வருமான அருட் தந்தை B.F. பொனிபஸ் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (15.09.2007) சனிக்கிழமை காலை 7மணிக்கு இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெறும். இந்நிகழ்வில் அனைவரும் பங்குபற்ற அழைக்கின்றோம்.

இளவாலை பங்கு
பங்குத்தந்தையும்
பங்குமக்களும்.
(சி-53679)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்டி திருவிழாவிற்கு முதல்நாள் இரவு ஆலயத்தில் தங்கி நிற்க படையினர் அனுமதி

நல்லூர்,செப்.14

சாட்டி சிந்தாத்திரை மாதா திருவிழாவை முன் னிட்டு எதிர்வரும் 21ஆம் திகதி இரவு ஆலய எல்லைக்குள் பக்தர்கள் தங்கி நிற்ப தற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

உற்சவ ஏற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் வேலணை பிரதேச செயலகத் தில் நடைபெற்ற கூட்டத்தில் படை அதி காரிகள் இந்த அனுமதியை வழங்கினர்.

நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்ப மான திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி திருவிழாத் திருப்பலியுடன் நிறைவு பெற வுள்ளது.

திருவிழாவிற்கு வரும் பக்தர்களுக்கு போக்குவரத்து மற்றும் குடிதண்ணீர் வசதி களை ஏற்படுத்திக் கொடுப்பது -

பொதுமக்கள் கோவில் எல்லைப் பகுதி களில் மட்டுமே நடமாட அனுமதிக்கப்படு வர் -

உற்சவ தினங்களில் சுற்றாடலில் மது பானங்கள் விற்பனை செய்வது தடை செய் யப்படும். சூதாட்டம் கேளிக்கை போன் றவை அனுமதிக்கப்படமாட்டாது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற் பகல் 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலியும் காலை 9.30 மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசையும் நடைபெறும்.

இம்முறை முதல் தடவையாக தேர் உலா இடம்பெறவுள்ளது.

திருவிழாத் திருப்பலியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, பங்குத்தந்தை அருட்திரு. பிலிப் அடிகளார் ஆகியோர் ஒப்புக்கொடுப்பர். உற்சவத்தின் போது தொண்டர் சேவைகளும் இடம் பெறும். (202-111)

# முள்முருங்கை மரம் அருகி வருகிறது

யாழ்ப்பாணம்,செப்.14

குடாநாட்டில் திருமணத்திற்கு முதல் நாட்டப்படும் கன்னிக்காலுக்கான முள் முருங்கை மரம்' அருகி வருவதாக தெரி விக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் முள்முருங்கை மற் றும் கல்யாண முருங்கை மரங்களில் ஏற் பட்ட முடிச்சுக்கட்டி நோய் காரணமாக குடா நாட்டில் இம்மரங்கள் அழிந்துள்ளன.

இதன் காரணமாக தற்போதுகன்னிக் காலுக்கு உரிய மரம் இன்றி மாற்று மரங் களை நாட்டும் நிலைமைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக இன்று கன்னிக் காலுக்கு கரும்பு, கொய்யா, அரச மரம் போன்றவற்றை நாட்டி திருமண நிகழ்வு கள் நடத்தப்படுகின்றன.

இதேவேளை -

சில இடங்களில் உள்ள முருங்கை மரங் கள் கடந்த வருடத்தில் வெட்டப்பட்டு மழையைத் தொடர்ந்து சிறிய கொப்புகளை விட்டு வளரத் தொடங்கியுள்ளன.

இத்தகைய சிறிய கிளைகளை நாட்டி கன்னிக் கால்கள் போடப்படும் நிலைமை யும் காணப்படுகிறது. (202-68)

# பாத்திரங்கள் அன்பளிப்பு

நவாலி,செப்.14

நவாலி சென்.பீற்றர்ஸ் பாடசாலைக்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழு மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான பாத்திரங் களை வழங்கியுள்ளது. (202-100)




யாழ்ப்பாணம்,செப்.14

அச்சுவேலி தெற்கு, உலவிற்குளம் சித் திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (203)

* * *

வடமராட்சி,செப்.14

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கி ழமை முற்பகல் 10 மணிக்கு 63 நாயன்மார் கள் குருபூசை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து சொற்பொழிவும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (203-160)

* * *

யாழ்ப்பாணம்,செப்.14

புத்தூர் வாதரவத்தை வேலங்காட்டு இயமாவில் துர்க்கையம்மன் ஆலய கும்பா பிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நாளை சனிக்கிழமை முற் பகல் 11 மணிவரை எண்ணெய் காப்பு சாத் துதல் இடம்பெறும். (203)

* * *

சுழிபுரம்,செப்.14

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆல யத்தில் விநாயகப் பெருமானுக்கு நாளை சனிக்கிழமை ஆவணிச் சதுர்த்தி அபிசேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (203-28)

* * *

ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு கொக் குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் விநாயகப் பெரு மானுக்கு விசேட அபிசேக பூசைகள் இடம் பெறவுள்ளன. (203)

* * *

கொக்குவில் இராமகிருஷ்ண சமித்தி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு விநாயகர் சதுர்த்தி பஜனை இடம் பெறவுள்ளது. (203)

# போதியளவு பால்மா கிடைக்காததால் பங்கீட்டுக்கே அவற்றை வழங்குகின்றோம்

## யாழ். ப.நோ.கூ. ச. பொது முகாமையாளர் தகவல்

நல்லூர்,செப்.14

யாழ்.ப.நோ.கூ.சங்கத்திற்குட்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கைக்கேற்ற அள வில் பால்மா கிடைக்கவில்லை. எனவே கிடைத்தவற்றைப் பங்கிட்டு வழங்குகின் றோம் என்று சங்கத்தின் பொதுமுகாமையா ளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் கருத் துத் தெரிவிக்கையில்:

குறைவான பால்மா வகைகளே எமக்குக் கிடைத்துள்ளன. 17ஆயிரத்து 800 லக்ஸ் பிறே பால்மா பக்கெற்றுகளும் 3ஆயிரத்து 500 அங்கர் பால்மா பக்கெற்றுகளுமே கிடைத்துள்ளன. இவற்றை உயர் அதிகாரி களின் அறிவுறுத்தல்களுக்கமைய பங் கிட்டு வழங்கின்றோம்.

போதியளவு பால்மா கிடைக்காததால் சில குடும்ப அட்டைகளுக்கு அவற்றை வழங்க முடியாதுள்ளது.

570கிலோ ரவையே எமது சங்கத்திற் குக் கிடைத்துள்ளது. எனவே வயோதிபர் களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விநி யோகித்து வருகின்றோம் - என்றார். (202-111)

# நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் தற்காலிக பதில் கணக்காளர்களாக நியமிக்கப்படுவர்

குருநகர்,செப்.14

வடமாகாணத்தில் பணிபுரியும் நிகழ்ச் சித் திட்ட உதவியாளர்கள் சிபார்சுகளின் அடிப்படையில் தற்காலிக பதில் கணக்கா ளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

திணைக்களங்களில் கணக்காளர் களுக்கு நிலவிவரும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் குறிப்பிட்ட திணைக்களத் தலைவர்களின் சிபார்சின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட வுள்ளன. இதற்கான அனுமதியை வட மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை வட மாகாண சபையின் பிரதம பொறியியலா ளர் சி.ரங்கராஜன் சம்பந்தப்பட்ட திணைக் களத் தலைவர்களுக்கு விடுத்துள்ளார்.

கணக்காளர் வெற்றிடம் உள்ள திணைக் களத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமைபுரியும் மேற்படி அலுவலர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு அவர் கணக் கியலை ஒரு பாடமாகக் கொண்ட முகா மைத்துவ அல்லது வணிகப் பட்டதாரியா கவோ அல்லது உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சித்தியெய்தியவராகவோ இருக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை உரிய நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களிடம் இருந்து மட்டும் பெற்று சிபார்சு செய்து எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள் ளது. (202-51)



யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின்போது திருநெல்வேலிப் பகுதியில் அகாலமரணமான சற்குணராசா ருசந்தன் என்பவரின் இழப்பீட்டுத் தொகை செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

காப்புறுதி தொகையான 20 லட்சம் ரூபாவுக்கான காசோலையை யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் பா.நந்திக்குமார் உறவினரிடம் வழங்குவதையும் அருகில் யாழ்.கிளையின் விற்பனை நிறைவேற்று அதிகாரி பா.திருச்செந்தூரன் மற்றும் விற் பனை ஆலோசகர் இ.பிரதீபா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வடமராட்சி வலயத்தில் அதிபர்கள் இடமாற்றம்

வடமராட்சி கல்வி வலய பாடசாலை கள் சிலவற்றின் அதிபர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியா லய அதிபராக குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் எஸ். கே.யோகநாதனும், குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபராக பருத் தித்துறை தட்டாதெரு மெ.மி.த.க. பாட சாலை அதிபர் வீ.அம்பலவாணரும் -

தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை அதிபராக பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி பகுதித் தலைவி திருமதி பாமா நவரத்தினமும் வடமராடசி கல்வி வலயத் தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (202-160)

# கோப்பாய் பிரதேசத்தில் இரண்டு பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி

நல்லூர்,செப்.14

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற் குட் பட்ட 2 பாடசாலைகளின் மற்றும் சன சமூக நிலையத்தின் அபிவிருத்திப் பணி களுக் கென 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல வுத் திட்ட நிதியிலிருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளனர்.

ஆவரங்கால் மகாவித்தியாலயத்திற்கு தொலைபேசி இணைப்பு மற்றும் தள பாடக் கொள்வனவுகென 50 ஆயிரம் ரூபா வும்

அச்சுவேலி மகாவித்தியாலய கட்டட புனர்நிர்மாண வேலைகளுக்கென ஒரு லட்சம் ரூபாவும் -

ஆவரங்கால் சர்வவோதய சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கு 50 ஆயி ரம் ரூபாவும் - ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. (202-111)

# தானங்களில் சிறந்தது இரத்ததானம்



விஞ்ஞானம், தொழில் நுட்பம் அதிவேகமாக வளர்ச்சி அடைந்தாலும் மனித இரத்தத்திற்கு மாற் றுத் திரவம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை

அதிர்ஷ்டவசமாக மனித இரத்த வர்க்கத்தில் நான்கு வகைதான் இரத்த தானத்திற்கு உபயோக மானவை.

A,B,O,AB என்பவையே அந்த நான்கு வர்க்கங் களும் ஆகும். இத்துடன் Rh பொசிட்டிவ், நெகட் டிவ் (Rh Positive/Negative என இருவகையுண்டு. O, Rh நெகட்டிவ் இரத்தம் ஏனைய வகை இரத்தங் களுடன் சேரும் AB, Rh பொசிட்டிவ் அதே வகையுள்ள குருதியுடனேயே சேரும்.

எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றவும், மிகவும் சிக்கலான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவும் இரத்தம் மிகவும் அவசியமானது. இத்துடன் சில நச்சுப் பதார்த்தங் களை செயலிழக்கச் செய்வதற்கும் உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை வலுப்படுத் தவும் இரத்த மாற்றுச் (Exchange transfusion)சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

இரத்ததானம் செய்பவர்களுக்கோ அல்லது பெறுபவர்களுக்கோ ஒரு கெடுதியும் வருவதில்லை. அநேகமானவர்கள் இரத்தானம் செய்யத் தகுதியுடையவர்கள். ஆனால் தயங்குவார்கள்.

ஸ்ரீ சத்தியசாயி பாபா இரத்தத்தை அன்புத் திரவம் (Liquid Love) என்றே வர்ணித் துள்ளார். நாம் இரத்தத்தை தானம் செய்யும் பொழுது இறைநாமத்தை உச்சரித்தோமா னால் இரத்தம் பெறுபவருக்கு பெரும் நன்மை பயக்கும் என்றும் சொல்லியுள்ளார்.

ஆகவே நாம் இரத்தானம் செய்யமுன்வரவேண்டும்.

உலகளாவிய ரீதியில் சத்தியசாயி நிலையங்களில் நாளை சனிக்கிழமை இரத்ததான நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

அந்தவகையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரத்தான நிகழ்வு சேர் பொன். இராமநாதன் வீதியில் உள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடை பெற வுள்ளது.

இரத்தானம் செய்ய விரும்பும் அனைவரையும் இங்கு வருகைதந்து தானம் செய்யு மாறு கேட்கப்பட்டுள்ளது.

- வைத்தியகலாநிதி இ.கணேசமூர்த்தி.




# கோயிலிலிருந்து ஓடுகள் திருட்டு

வடமராட்சி,செப்.14

ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் கரணவாய் வடக்கிலுள்ள கோயில் ஒன்றி லிருந்து இனந்தெரியாதோரால் கூரை ஓடு கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்ப வம் நடைபெற்றுள்ளது.

கரணவாய் வடக்கு சாத்தானை வீரபத் திரர் கோயில் பரிவாரமூர்த்தியாக இருக் கும் பிள்ளையார் கோயில் கூரையில் இருந்த ஓடுகளின் ஒரு பகுதியே இனந்தெரியா தோரால் திருடிச் செல்லப்பட்டுள்ளன. (202-160)

# தையல் பயிற்சி

கட்டைவேலி,செப்.14

துன்னாலை, அல்லையம்பதி வடி வேலர் மணிமண்டபத்தில் ஆரம்பிக்கப்பட் டுள்ள இலவச தையல் பயிற்சி வகுப் புக்கு மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள னர்.

திங்கள் முதல் வெள்ளிவரை பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை இடம்பெறும் தையல் பயிற்சி வகுப்புக்கு அயல் கிராமங் களைச் சேர்ந்தோரும் இணைத்துக் கொள் ளப்படவுள்ளனர் என வடிவேலர் மணி மண்டப இயக்குநர் தெரிவித்தார்.(202-275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசத்தின் சமாதானத்திற்கான பொதுவான

### ஐக்கிய உபவாச ஜெபம்

செய்தியாளர்: போதகர் A. அருமைநாயகம் (விசுவாசிகள் சபை)
இடம்: தேவசபை (A.O.G) No: 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
காலம்: நாளை (15.09.2007) சனிக்கிழமை
நேரம்: ஆரம்பம் காலை 9 .30 மணி முதல்

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி ... (11 நாளாகமம் 7:14)

ஜெபிக்க விரும்பும் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அனுசரணை NCEASL

யாழ்.சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம், போதகர் ஒன்றியம், யாழ்ப்பாணம். (64831)

---

சிறுவர் நிதியத்திற்கு சம்மேளனம் நிதியுதவி

வறிய விவசாய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வியை மேம்பாடு செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறுவர் புலமைப்பரிசில் நிதியத்திற்கு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் 40 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

(202-95)

---

## மூன்றாம் ஆண்டின் நினைவுகளில்...

மலர்வு 24 . 01 . 1936



உதிர்வு 14 . 09 . 2004

### திருமதி அக்னெஸ் அம்மா அருளானந்தம்

அனைத்தும் அவர் வழியாய்
அவருக்காகப் படைக்கப்பட்டன;
அனைத்துக்கும் முந்தியவர் அவரே,
அனைத்தும் அவரோடிணைந்து
நிலை பெறுகின்றன. (கொலோ 1:16-17)

எங்கள் அன்பு அம்மாவின் ஆன்மா இறைசந்நிதியில் அமைதி காணட்டும்.

"அருள்நேச வாசா", சென்.தோமாஸ் லேன், பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், அன்புள்ளங்கள். (64070)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மகாதேவன் தனரூபன் (செல்வா)

தாயின் மடியில் பூவாக: 29.01.1984

லொறிப் பாதகனின் கொடூர அழிப்பில் சருகாக: 30.08.2003

திருதியை: 14.09.2007

"நேற்றுப் போலுள்ளது எல்லாமே
உருண்டோடியது நான்கு வருடங்கள்
ஆனாலும் இதயம் முழுவதும் துள்ளித் திரியும்
சிட்டாக நீயடா, செல்வா நீ எம்மோடு இல்லை
என்பதை நம்ப மறுக்கிறது நம் உள்ளம்
நாம் இருக்கும் வரை நீ இருப்பாயடா எம்மோடு
உயிரினில் உயிராக உணர்வினில் உணர்வாக."

உன் பிரிவால் வாடும்: அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை.

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு. (64746)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர் இ.சத்தியசீலன் அவர்களின் அன்புத்தாய்

திருமதி **இராசரத்தினம் அரியமணி**

அவர்களின் இழப்பினால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி.

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச்சங்கம்.

---

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### செல்லத்துரை பரமேஸ்வரி

பருத்தித்துறை, பத்திரகாளி கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பரமேஸ்வரி 13.09.2007 வியாழன் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சொக்கலிங்கம் செல்லத்துரை (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2007) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை. (சி.53677)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

திருமதி
### பராசக்தி முருகையா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல.02.மாதிரி உறைவிட வீதி, 4 ஆம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி முருகையா அவர்கள் 11.09.2007 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவி முருகையாவின் அன்பு மனைவியும் தம்பு- தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரவி- சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் ரஞ்சினி, வீரகுலசிங்கம் (இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோகத்தர்), ஸ்ரீகந்தராஜா (Ceycan ரவல்ஸ்), அம்பிகா விஜயகுமார் (நூலகம், வவுனியா வளாகம்), ஸ்ரீராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும் மு.வீரகுலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்), விஜகுமார் (சேவாலங்கா மன்றம், வவுனியா), சி.யோகாம்பிகை, சி.சௌந்தி ஆகியோரின் அன்பு மாமியும் பிரசன்னா, பிரசாந்தன், பிருந்தாபன், வருண், நிரேஷ், கிசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சரஸ்வதி செல்லையா, காலஞ்சென்ற தம்பு தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.09.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 8மணியளவில் ஆரம்பமாகி மு.ப.10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சதாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த்.விஜயகுமார் (சேவாலங்கா மன்றம், வவுனியா).
தொலைபேசி:
0242223838,0773952753,0776309664. (64818)

---

ஓம் சாய்ராம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி பரமநாதன் யசோதரா

எனது ஆருயிர் குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், பல வழிகளில் உதவிபுரிந்தோருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (14.09.2007) [illegible] ஆத்மசாந்திப் பூஜை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


நாதன்ஸ் சினிமா, யாழ்ப்பாணம். (64726)

கணவர்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 04 . 1924



இறப்பு 26 . 08 . 2006

### திருமதி அப்பையா செல்லமுத்து

திதி: ஆவணிச் சதுர்த்தி

அன்பின் சிகரமே அம்மா!
ஆறவில்லை எம் நெஞ்சம்
உனை பிரிந்து ஓராண்டு ஆனது
உன் நினைவு எம் நெஞ்சில்
உறங்கி வாழுதம்மா!

பேரமகன் V.சிவானந்தன், 'சிவ மில்', 46/1, பிறவுன் வீதி, 4 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்: மக்கள், பேரமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (61830)

---

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 17.11.1949



உதிர்வு 15.08.2007

### திருமதி புவனேஸ்வரி சிவராசா (ராணி)

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு வந்து எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறி இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்டவர்கள் வெளிநாடு, வெளிமாவட்டங்களிலிருந்து தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இன்று (14.09.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மூத்தவிநாயகர் வீதி, நல்லூர். (64829)

குடும்பத்தினர்.

---


THE SCIENCE CORNER

Clock Tower Lane Jaffna

A/L 2008, 2009, கணித உயிரியல், வகுப்புகள் நேர அட்டவணை அலுவலகத்தில்

2007 மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்
சனி, ஞாயிறு ஆரம்பம் 16.09.2007 நேரம் காலை 10:00

2007 மீட்டல் வகுப்புகள் (சனி, ஞாயிறு)
இணைந்தகணிதம் பிரபல ஆசிரியர்
பௌதிகவியல் செந்தில்குமரன்
இரசாயனவியல் டயஸ்
உயிரியல் பொன்திவாகரன்

2008, 2009 வகுப்புகள் நடைபெறுகின்றன
இணைந்தகணிதம் பிரபல ஆசிரியர்
பௌதிகவியல் அநபாயன்
இரசாயனவியல் ராஜா
உயிரியல் பொன்திவாகரன்

சிங்களம் சபேஸ்
சனி, ஞாயிறு காலை 07:00 - 08:00
திங்கள் வெள்ளி மாலை 04:30 - 05:30


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடபகுதி மக்களின் வாழ்வியல் நிலையை மேம்படுத்துவதே அடுத்த பணியாகும்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு,செப்.14

வடபகுதியின் உணவு தேவையை நாம் இப்போது ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்துவிட்டோம். பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் வாழ்வியலை மீளமைப்பது பற்றியுமே நாம் இனிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. வடபகுதி உற்பத்திப் பொருள்களை இப்பொழுது அங்கு செல்லும் கப்பல்கள் மீளவரும்போது ஏற்றி வருகின்றன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண இவ்வாறு கூறியுள்ளார். சில தினங்களுக்குமுன் ஆணையாளர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வடபகுதிக்கான உணவு, மருந்து மற்றும் பொருள்களைக் கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டு வருவது பற்றி விரிவாக எடுத்துக் கூறியிருந்தார். அதன் ஒருபகுதி ஏற்கனவே 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அவர் தெரிவித்திருந்த மேலும் சில கருத்துக்கள் வருமாறு:-

பொருள்களைவிலை கொடுத்து வாங்கும் மக்களின் சக்தி இன்னமும் வலுவில்லாமலே காணப்படுகின்றது. கட்டடப் பொருள்களை அனுப்புவதிலும் காலதாமதம் இருந்து வருகின்றது.

யாழ்ப்பாணம் சென்று திரும்பும் கப்பல்கள் இப்பொழுது வடபகுதி உற்பத்திகளான புகையிலை மற்றும் வெங்காயம் போன்றவற்றை ஏற்றிவருகின்றன. அங்குள்ள மக்கள் விவசாயத்தில் மீளவும் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை இது காட்டுகின்றது.

இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ப)

## வாழ்வக ஸ்தாபகரின் உருவச் சிலை திறப்பும் நினைவுப் பேருரையும்

குருநகர்,செப்.14

வாழ்வக ஸ்தாபகர் அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின்முதலாம்ஆண்டுநினைவுதின நிகழ்வுகள் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் இல்லத்தில் அண்மையில் இல்லத்தின் பொருளாளர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

வாழ்வகச் சிறார்களின் தேவாரத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் திருவுருவச் சிலையை இல்லத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத் தம்பியின் ஞாபகார்த்த நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி நிகழ்த்தினார். யாழ். பல்கலைக் கழக இசைத்துறையினரின் 'தமிழிசை அருவி' என்னும் இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. (202-51)

## சதுர்த்திகளில் சிறந்தது ஆவணிச் சதுர்த்தி

*ஆவணி மாதம் சுக்ல பட்சத்தில் வரும் சதுர்த்தி எனப்படும் நான்காவது திதியில் விநாயகப் பெருமானுக்கு விழா எடுத்து வணங்குகின்றோம். முழுமுதற் கடவுளாம் பிள்ளையாரின் பண்டிகைதினம் சதுர்த்தி திதியிலே நிகழ்வதாகும். பிள்ளையார் ஆலயங்களில் நாளை ஆவணி சதுர்த்தி இடம்பெறுகின்றது*

*சிரேஷ்ட ராஜன் என்றால் முதன்முதலில் தோன்றியவர் என்று பொருள். 'பரும்மணஸ்பதி' என்றால் வேதத்துக்கே தலைவன் எனப் பொருள். எந்த நல்ல காரியத்தினைநினைத்து வணங்கினாலும், முதலில் இடர் நீக்கும் பெருமானாகிய கணேசனைத் துதித்து வழிபடுவது இந்துக்களின் குறிப்பாகத் தமிழ் மக்களின் மரபு. சிவாலயங்களுக்குச் செல்வோர் முதலில் அங்குள்ள பிரணவஸ்வரூபியான விநாயகரைத் தொழுதுவிட்டே மற்ற தெய்வங்களின் சன்னதிக்குச் சென்று வழிபடுவர். அரச மரத்தினடியிலெல்லாம் பிள்ளையார் எழுந்தருளியிருப்பார். நமது இடர் நீக்க அவர் காத்திருக்கிறார்.*

ஞானக்கதிர்

*பரமசிவன், பார்வதி, மகாவிஷ்ணு, லட்சுமி, சரஸ்வதி, முருகன் போன்ற எல்லாக் கடவுளர்களும் மனித முகமுடையவர்கள். ஆனால், பிள்ளையாருக்கு மட்டும் யானை முகம். யானையைப் போன்றே துதிக்கையும் உள்ளவர். துங்கக் கரிமுகத்துத் தூமணி, கஜமுகன், யானைமுக்த்தோன், வேழமுகத்தோன் என்றெல்லாம் துதிக்கப் பெறும் கணபதி 'ஓம்' காரஸ்வரூபி ஆவார். எங்கும் வியாபித்து நிற்கும் பரமாத்மாவின் சொரூபமுள்ளவர். இவருக்கும் மூத்தவரான கடவுளரே இல்லை என்பதால் இவர் விநாயகன் என அழைக்கப்படுகிறார்.*

*விநாயகப் பெருமானுக்கு மிகவும் உகந்தது 'மோதகம்' எனப்படும் கொழுக்கட்டை. வெள்ளையான மாவினால் கூடு செய்து உள்ளே இனிப்பான பூரணம் நிரப்பி, நீராவியில் வேகவைத்துச் செய்யப்படுவது இது. பிள்ளையாரின் கையில் எப்பொழுதும் மோதகம் இருப்பதால் இவருக்கு 'மோதக ஹஸ்தர்' என்றும் பெயருண்டு. பழங்களுள் விளாங்கனி, நாவல்பழம், வாழைப்பழம் குறிப்பிடத்தக்கவை. பிள்ளையார் பூஜைக்கு அருகம்புல்லும் எருக்கம் பூ மாலையும் இன்றியமையாதவை. விநாயக சதுர்த்தியன்று செய்யப்படும் பூஜைக்கு மட்டும் துளசி இலை சேர்க்கப்பட்டலாமேயொழிய அன்றாடப் பூஜைக்குத் துளசி சேர்க்கலாகாது. இதற்கு ஒரு புராணக்கதை உளது. துளசிதேவி விநாயகரை மணம் புரிய விரும்பி நெடுங்காலம் தவம் புரிந்தாள். விஷ்ணுவிற்கே நீ மனைவியாகவேண்டும் என்று விநாயகர் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் துளசிதேவி விநாயகரையே மணக்க விரும்புவதாகப் பிடிவாதம் பிடித்தாள். துளசியின் பிடிவாதம் கண்டு வெகுண்ட விநாயகர், நீ செடி வடிவம் பெறுவாயாக. எனது நித்திய பூஜைக்கும் நீ அருகதையற்ற வளா வாய் எனச் சாபம் கொடுத்தார். துளசிதேவியின் பால் மனமிரங்கி,விநாயக சதுர்த்தி பூஜைக்கும் மட்டும் மற்ற மலர்களைப் போல துளசியையும் சேர்த்துக்கொள்ளலாம் என அருளினார்.விநாயக சதுர்த்தியன்றும், சுக்லபக்ஷ சதுர்த்தி திதிகளிலும் சந்திரனைப் பார்க்கலாாது என்பது மரபு.*

# ஐந்து பேர் கொண்ட உதைபந்தாட்டம் மயிலங்காடு ஞானமுருகன் வி.க. சம்பியன்

### யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக இடம்பெற்ற போட்டி

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக இடம்பெற்ற ஐந்து பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் 75ஆவது நிறைவு விழாவையொட்டி இடம்பெற்ற பவள விழா நிகழ்வுக்காக இந்த உதைபந்தாட்டப் போட்டி முதல் தடவையாக நடத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்ட நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்ற நிலையில் காணப்பட்டார்கள். இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு அணிகளும் விடாமுயற்சியுடன் விளையாடியதன் மூலம் இரு அணிகளும் மாறி மாறி கோல்களைப் பெற்று மேலும் மூன்று கோல்களைப் பெற்று தலா நான்கு கோல்கள் என்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக மேலும் பத்து நிமிடங்கள் வழங்கப்பட்டபோதிலும் இரு அணிகளும் கோல்கள். எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலைமையில் சமநிலை உடைப்பு உதைகள் மூன்று வழங்கப்பட்டன.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 3 உதைகளையும்



அரச அதிபரிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறும் ஞானமுருகன் அணித்தலைவர்

உதைத்து கோல்களைப் பெற்றுக் கொண்டபோதிலும் றெட் றேஞ்சர் விளையாட்டுக் கழக வீரர் ஓர் உதையை வெளியில் உதைத்தமையால் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 7:6 என்ற என்ற கோல்களினால் வெற்றி பெற்று பவளவிழாக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

சுற்றுப்போட்டியில் அதிக கோல்களைப் பெற்ற வீரனாக மானிப்பாய் றெட் றேஞ்சர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விநோத்தும் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரனாக ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தவரூபனும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி கௌரவித்தார். மற்றும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் அன்ரனிப்பிள்ளை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.நவரத்தினராசா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் விமலேந்திரன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டார்கள். (50-68)

## யங்கென்றீசியன் நடத்திய போட்டியிலும் ஞானமுருகன் வி.க வெற்றி பெற்றது

வலி.வடக்கு,செப்.14

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண் டன.

இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாது முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிடநேரத்தில் ஞான முருகன் விளையாட்டுக்கழக இடது முன்னணி வீரர் தனக்கு கிடைத்த பந்தொன்றை நேரடியாக கோல் கம்பத்தில் செலுத்தி முதல் கோலை பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து இரு அணிகளும் கோல்கள் பெற முயற்சித்த போதிலும் கோல்களைப் பெறமுடியாத நிலையில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல்களினால் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டு விழா கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சேகர் ஆட்டநாயகனாகவும், போட்டியில் அதிக கோல்களை அடித்த வீரனாக தபோதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.றாச்குமார் சிறந்த கோல் காப்பாளராகவும் தர்மதாஸ் விஜயன் தொடர் ஆட்ட நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

**விளையாட்டு**

முதலாம் இடத்தைப் பெற்ற ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டதுடன் 2ஆம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் பாடும் மீன்விளையாட்டுக் கழகத்திற்கு 10ஆயிரம் ரூபாவும் கிண்ணமும் வழங்கப்பட்டது.

3ஆம் இடத்தைப் பெற்ற நாவாந்துறை சென்நீக்கிளஸ் விளையாட்டுக் கழகத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும், 4ஆம் இடத்தைப் பெற்ற அராலி கெனித் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. (50-86)

## உள்ளூராட்சி வாரக் கிரிக்கெட் போட்டி; வலி. தென்மேற்கு பிரதேசசபை சாம்பியன்

யாழ்ப்பாணம், செப். 14

உள்ளூராட்சி வார பெருவிழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற கிரிக் கெட் போட்டியில் வலி. தென் மேற்கு பிரதேச சபை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கு இடையில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில கடந்த ஒரு மாத காலமாக இடம் பெற்று வந்தது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி போட்டியின் இறுதி போட்டியில் யாழ்.மாநகர சபை அணியும் வலி. தென்மேற்கு பிரதேச சபை அணியும் மோதிக் கொண்டன.

இவ் ஆட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதிவரை மிகத்திறமையாக விளையாடிய வலி.தென் மேற்கு பிரதேச சபை வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கி கொண்டது. (50-95)

# கந்தரோடை சவாரித் திடலில் மீண்டும் போட்டிகள் ஆரம்பம்

நீண்டகால இடைவெளியின் பின்னர் சுன்னாகம் கந்தரோடை சவாரித்திடலில் மாட்டு வண்டி



சவாரிப் போட்டிகள் இடம் பெற்றுள்ளன. அளவெட்டி மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் போட்டியில் மாட்டு வண்டில்கள் கலந்து கொண்டன.

'சி' பிரிவில் 11 வண்டில்களும் 'பி' பிரிவில் 14 வண்டில்களும் 'எ' பிரிவில் 8 வண்டில்களுமாக மொத்தம் 33 வண்டில்கள் கலந்துகொண்டன.

'சி' பிரிவில் முதலாம் இடத்தை மல்லாகத்தைச் சேர்ந்த சிறிலக்சனும் 2ஆம் இடத்தைப் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ராஜ்கினும் 3ஆம் இடத்தை மானிப்பாயைச் சேர்ந்த செல்வரத்தினமும் பெற்றுக்கொண்டார்கள்.

'பி' பிரிவில் முதலாம் இடத்தை பிரான்பற்றைச் சேர்ந்த ஆனந்தராசாவும் 2ஆம் இடத்தை அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளையும் 3ஆம் இடத்தை திருநெல்வேலியைச் சேர்ந்த சசிகுமாரும் பெற்றுக் கொண்டார்கள்.

'எ' பிரிவில் முதலாம் இடத்தை அளவெட்டியைச் சேர்ந்த சிவஞானமும் 2ஆம் இடத்தை அச்செழுவைச் சேர்ந்த செல்வரத்தினமும் மூன்றாம் இடத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகாலிங்கமும் பெற்றுக்கொண்டார்கள். இப் போட்டிகள் சனசமூக நிலையத் தலைவர் க.உதயகுமார் தலைமையில் இடம் பெற்றன. (50-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை
ஸ்ரீராமஜெயம்

# விவாஹ சுபமுகூர்த்த பத்திரிகை

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வஜித் வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் (15.09.2007) சனிக்கிழமை சுவாதி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 9 மணிமுதல் 9.46 மணிவரையுள்ள கன்யா லக்ன சுபமுகூர்த்த வேளையில்

வண்ணை பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள்
அவர்களின் பௌத்திரனும்
வண்ணை பிரம்மஸ்ரீ தி.சி. சீதாராமசாஸ்திரிகள் அவர்களின்
தௌஹித்திரனும்
பிரம்மஸ்ரீ சந்தானகோபால சர்மாவின் சகோதரனுமாகிய
பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மாவின் புத்திரனுமான
சிரஞ்சீவி கோகுலபாலனுக்கு



திருக்கேதீஸ்வரம் சிவசாயுஜ்யஸ்ரீ சுப்ரமணியபட்டர்
அவர்களின் பௌத்திரியும்
கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள்
அவர்களின் தௌஹித்திரியும்
ஸ்ரீ ஹரிஹரனின் சகோதரியுமாகிய
சிவஸ்ரீ கேதீஸ்வரநாத குருக்களின் ஏகபுத்திரியுமான
சௌபாக்கியவதி ஸ்ரீவித்யாவை

கன்னிகாதானம் திருமாங்கல்யதாரணம் பாணிக்கிரஹணம் செய்ய பூரணபுஷ்கலா சமேத தர்மசாஸ்தா சுவாமியினதும் ஸ்ரீ கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரசுவாமியினதும், வண்ணை காட்டுதறை விநாயகப் பெருமானினதும் அனுக்ரகத்துடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட சுபமுஹூர்த்தம் Paradise Banquet and Convention Center (Queen Mary Hall) இல் நடைபெறும்

தங்கள் நல்வரவை நாடும்

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா<br>ஸ்ரீமதி பார்வதி தம்பதிகள்<br>15, B.A.Thamby Lane,<br>Vannarponnai, Jaffna Sri Lanka,<br>Tel: 077-7468884<br>Canada:(647) 282-5072 | ராஜராஜஸ்ரீ<br>கு.நகுலேஸ்வரகுருக்கள்<br>திருமதி<br>கு.வேதநாயகி அம்மா | சிவஸ்ரீ சு.கேதீஸ்வர குருக்கள்,<br>ஸ்ரீமதி கௌரி தம்பதிகள்<br>147, Summitcrest Drive,<br>Richmond Hill,<br>ON L4S 1A9, Canada,<br>Tel:(905) 508-0628 |

(64804)

# Jaffna Hindu College

"Without having any doubts, learn what is worth learning and afterwards act in full accord with what you have learnt."

## English Union's Book Launch "SWEET FRUITS"



A Book of English Poems

*Composed by*: **Mr. S. Maheswaran**
*(Teacher of English, Jaffna Hindu College)*

**Date** : 15 Sept, 2007 **Time** : 1.00 p.m.
**Venue :** Kumaraswamy Hall, Jaffna Hindu College.
**Note well, please :** The Carrying ceremony of the books will commence from the Gnana Bhairavar Kovil along with the auspicious accompaniment
**Chief Guest : Mr. A. Panchalingam** *(Former Principal) B.Sc. (Cey.) Dip. in Edu., JD EPA. (New Delhi)*

*Your gracious presence on the occaion of lanchings the book of English Poems 'Sweei Fuits' is very much Solicited*

### A CORDIAL WELCOME TO YOU!

| | |
|---|---|
| **Master P. Niroshan**<br>*President* | **Master K.Vicknan**<br>*Secretory* |
| **Mr. P. Maheswaran**<br>*Patron*<br>*(Deputy Principal)* | **Mr. M.Sivathasan**<br>*Teacher in Charge* |

### Agenda

* Reception. * Lighting - Traditional Oil Lamp.
* Prayer. * Welcome Dance * Welcome Song

Welcome Address by
**Master P.Niroshan** *(President - English Union - 2007)*

Conferment of Benediction by
**Prof. P. Balasundarampillai,**
*(Former Vice. Chancellor, University of Jaffna)*

Address by the Chairperson
**Mr. S. Srikumar** *(Subject Coordinatior, Bilingual Education)*

Inaugural Address by
**Mr. P. Maheswaran.** *B.Sc. (Hons). Dip. in Edu.*
*(Deputy Principal. Jaffna Hindu College)*

Address and Book Launch by
**Mr. S. Thiakarajah** *(A.D.E. - English)*
*Zonal Dept. of Education Jaffna*

Address by the Chief Guest
**Mr. A. Panchalingam** *(Former Principal, Jaffna Hindu College)*

Appreciator Address
**Prof. R. Kumarawadivel** *(Acting Vice - Chancellor, University of Jaffna)*
**Mr. S. Theivathavapalan** *(Former Lecturer, Palaly Theachez's College)*
**Mr.V.Paranthaman, M.A.** *(English Lecturer, ELTC, University of Jaffna)*

Distribution of Copies
by the Chif Guest : **Mr. A. Panchalingam**
*(Principal, Emeritus & Distinguished Chief Guest)*
First Recipient: **Mr. M. Sarawanapawan**
*(Manager Regional, Telecom Department, Jaffna)*
Honorary Recipient: **Mr. S. Thanapalasingam**
*(Proprietor - Apolo Hospital - Jaffna)*
**Lion T. Satkunarajah** *(Proprietor - Seematy Textiles, Jaffna)*
Special Recipient: **Mr. E.S.P. Nagaratnam**
*(Proprietor E.S.Perampalam & Sons)*
**Mr.A.Kunaratnam** *(Proprietor Kugan Stores, Hospital Rd, Jaffna)*

Review of the Book by Literary Genius
**Mr. S. Pathmanathan** *B.A. (Lond), (Former Principal, Palaly Teacher's College, Jaffna) &*
**Mr. S. Suntharesvaran** *B.A. (Hons)*
*(PGD in Education, M.Phil. in Linguistics,*
*(Senior Lecturer in English Language, University of Jaffna)*

Presentation of Souvenirs by the Author
**Mr. S. Maheswaran**
Song: **Grade Ten Students**
Reply by: **the Author**
Vote of Thanks by Master:
**K.Vicknan** *(Secretary English Union - 2007)*
School Anthem

**All Cordial Welcome to you!**

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
**ராஜீவ்**
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P No.
222 3529
222 2867
(64711)

### புறொயிலர் குஞ்சு விற்பனை

*தரமான புறொயிலர் குஞ்சு 15.09.2007 சனிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். முன் பதிவு செய்யவும்.*
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர். (64748)

### மணப்பெண் தேவை

இந்து கௌரவ, படித்த, குடும்ப, பட்டதாரி ஆசிரியருக்கு பட்டதாரி மணப்பெண் தேவை. பூரம், சிங்காசி வயது 32, 2இல் செவ்வாய். கிரபாவம் 43 1/2 குறிப்பு, குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:
தொ.பே.0776015640
முரளி மாஸ்டர்,
C/O சிவசம்பு,
பொற்பதி றோட்,
கொக்குவில்.

### கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக் குண்டு.
தொடர்பு:
**ராஜீவ்**
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை
T.P No.
2223529
222 2867

### தவறிவிட்டது

கந்தையா சுதாகரன், பாலாவோடை, உடுவில் தென்கிழக்கு என்னும் விலாசமுடைய தேசிய அடையாள அட்டை (781813664V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குறிப்பிட்ட விலாசத்தில் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப் படும்.





கணனி கற்கைநெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை

Win 75 % Scholarship

ASIAN-CSC வழங்கும் கணனி கற்கைநெறிக்கான புலமைப்பரிசில் பரீட்சை பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாகவும் வினாத்தாள் தமிழ் மொழியிலும் அமையும்.

இப்புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடநெறிகள் யாவும் England ICM,LACE,IMIS மற்றும் இந்திய CSC,TATA மற்றும் Telly உயர்கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றுள்ளவையாகும்.

A/L 2007 பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் கணனி உயர்கல்வியில் ஆர்வம் உடைய அனைவரும் இவ் புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றலாம்


பரீட்சை அனுமதிகள் இலவசம்

பரீட்சைக்கான நேரம் மற்றும் அனுமதிஅட்டைகளுக்கு....

ASIAN-CSC COMPUTERS

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | ASIAN | No 2G, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் Tel :021-222-5677 |
| நெல்லியடி | ASIAN | கொடிகாமம் றோட் நெல்லியடி Tel :077-3122198 |
| யாழ்ப்பாணம் | CSC | No 101,2ம்மாடி ஸ்ரான்லி வீதி(மக்கள் வங்கிக்கு மேலாக) Tel :021-222-8196 |


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### சின்னர் சின்னத்தம்பி
(ஓய்வுபெற்ற நகரசபை மின் உத்தியோகத்தர்)

மலர்வு 30-08-1934 — உதிர்வு 15-08-2007

15.08.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் தந்திமூலமும் ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் இதில் குறிப்பிடத்தவறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இல்லத்தில் இன்று (14.09.2007) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

'புஸ்பா இல்லம்',
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (64742)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### சிதம்பரப்பிள்ளை சிவசங்கர்
(சங்கர் Work Shop உரிமையாளர்,
காளிகோயிலடி, மல்லாகம்.)

அன்னை மடியில்
08-10-1978

ஆண்டவன் சந்நிதியில்
26-08-2006

திதி : திருதியை

மாண்டவர் மீண்டதில்லை...
மானிடர் நியதியிது
மீண்டிடும் நினைவுகள்...
மீட்டிடும் உணர்வுகள்
மனிதம் மரணித்ததால்
மரணித்துக் கொண்டவன்.

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்,
அம்மா, அப்பா, தங்கை,தம்பி.
காளிகோயிலடி,
மல்லாகம்.

(64695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிதித் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட முறைமையில் சிக்கல்

# நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகருக்கு எதிராக வரும்!

## அவரது ஐ.தே.கட்சியே போர்க்கொடி!!

கொழும்பு, செப். 14

நாட்டின் இறைமை, அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளை என்பனவற்றிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நிதித் திருத்தச் சட்டங்களை சபாநாயகர் அங்கீகரிப்பாரானால் அந்நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் அத்துடன் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் கொண்டு வரப்படும்.

- இப்படி ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவும், ஸ்ரீ லங்க சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு அமைப்பாளர் சிறிபதி சூரியாராய்ச்சியும் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனை அவர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறியவை வருமாறு:-

வரிகளைப் போடுவதும், அவற்றை நீக்குவதும், இல்லையேல் கூட்டிக் குறைப்பதும் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்தின் மூலமே மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ சகோதரக் கம்பனி அரசு வரவு - செலவுத் திட்டத்திற்கு முன் இந்த மினி பட்ஜெட் மூலம் இந்த ஐந்து நிதித் திருத்தச் சட்டங்களையும் கொண்டு வந்து நாட்டு மக்கள் மீது பெரும் சுமையை ஏற்றிவைக்க முனைகின்றது.

107 அமைச்சர்களுக்கு ஆடம்பர சொகுசு வாகனங்களை வழங்கவும், அவர்களுக்கு வீட்டு வாடகையாக கோடிக்கணக்கான ரூபாவைத் தரவும், அவர்களுடைய தனிப்பட்ட செலவுகளைச் சமாளிப்பதற்குமே இப்புதிய வரி அறவீட்டுச் சட்டங்களைத் திருட்டுத்தனமாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் சட்ட வரைவுகள் நிறைவேற்றப்பட்ட முறைமை சட்டவிரோதமானது. ஆகையால் அவற்றை நடைமுறைப்படுத்தவிடமாட்டோம். அதற்காக நாட்டு மக்களை ஒன்று திரட்டி நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

அதேவேளை சட்டவிரோதமான முறையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதித்திருத்தச் சட்டங்களை சபாநாயகர் அங்கீகரித்தால் அதனை எதிர்த்து உயர்நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்வோம். சபாநாயகரைப் பதவி விலகும்படி போராட்டம் நடத்துவதுடன், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றையும் கொண்டு வருவோம். - என ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

**சந்தைப் போராட்டம்**

இதேவேளை, சட்டவிரோதமான வரி விதிப்பு, அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு, அரசின் ஊழல், மோசடிச் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக நாடளாவிய ரீதியில் நாளை மறுதினம் சந்தைப் போராட்டம் நடத்தப்படும்.

மக்கள் கூடும் 400 சந்தைகளில் இப்போராட்டம் செப்தெம்பர் 16ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 16ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நடத்தப்படும். 'மக்களின் துயர் துடைக்கும் போராட்டம்' என இப்போராட்டத்திற்குப் பெயரிட்டுள்ளோம். - எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.(சி)

# கே.பி. கைது செய்யப்பட்டாரா? இல்லை என்கிறது தாய்லாந்து

கொழும்பு,செப்.14

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச நிதி சேகரிப்பாளரும், ஆயுத சுவீகரிப்பாளருமான 'கே.பி' என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை தாம் கைது செய்யவில்லை என்று தாய்லாந்து அரசு அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக தாய்லாந்தின் இன்டர்போல் தலைவர் கேணல் அபிசாட் சுரிபன்யா எ.எவ்.பி செய்திச் சேவைக்கு கூறியவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரும், அதன் வெளிநாட்டு ஆயுத முகவராக 20 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டவருமான 'கே.பி' என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் பாங்கொக்கில் கைது செய்யப்படவில்லை.

குடிவரவு, குடியகல்வு திணைக்கள அறிக்கைகளின்படி கடந்த இரு வருடங்களாக அவர் தாய்லாந்திற்குள் நுழைந்ததற்கான தகவல்கள் எதுவும் இல்லை. கடந்த மூன்று அல்லது நான்கு நாள்களுக்குள் இலங்கையைச் சேர்ந்த எவரையும் நாம் கைது செய்யவுமில்லை.

இது தொடர்பில் பாங்கொக்கில் உள்ள இலங்கையின் தூதரகத்திலும் தகவல்கள் இல்லை- என்று அவர் தெரிவித்தார்.

மேலும் பத்மநாதனை இலங்கைக்கு நாடு கடத்துமாறு கோரி இலங்கை அரச தரப்பு தாய்லாந்து பொலிஸாரை நாடியுள்ளதாக வெளிவந்த தகவல்களையும் அவர் மறுத்துள்ளார்.

குமரன் பத்மநாதன் தாய்லாந்தில் கைது செய்யப்பட்டிருந்தார் என இலங்கை அரசின் படைத்துறை தாய்லாந்து தகவல்களை மேற்கோள்காட்டி தகவல் வெளியிட்டிருந்தது. பத்மநாதனின் கைது தொடர்பாக தாய்லாந்து அரசின் உறுதியான தகவல்களுக்காக தாம் காத்திருக்கின்றனர் என இந்தியாவின் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' நாளேட்டுக்கு வழங்கிய நேர்காணலின்போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோகன்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# நிகழ்வுகள்

நவாலி, செப்.14

ஆனைக்கோட்டை, குடும்பப் பாடசாலைகளுக்கிடையேயான சிறுவர் அரங்கப் போட்டிகள் நாளை சனிக்கிழமை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும். (203-100)

* * *

தீவகக் கல்விவலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை ஆசிரிய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (1)

* * *

சாவகச்சேரி பிரதே சபையின் 2007ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வும் பரிசில் வழங்கலும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக - தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார்.

(203-131)

* * *

தேசிய மட்டல் உடற்பயிற்சிப் போட்டியில் சாதனை படைத்த மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் தலைமையில் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், மல்லாகம் பதில் நீதிவான் ஆர்.வசந்தசேனன் ஆகியோர் கலந்துகொள்வர். (203-86)

* * *

கொக்குவில் அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கலட்டி ஆத்திசூடி வீதியில் உள்ள கலைமகள் சனசமூக நிலையத்தில் இணைந்த மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இணுவில், கோப்பாய், திருநெல்வேலி வட்டம், வட்டுக்கோட்டை, சுன்னாகம், தீவகம் ஆகிய கழகங்கள் இணைந்து இந்த முகாமை நடத்தவுள்ளன. (203)

# 45 ஆம் நாள் நினைவலைகள்





## அமரர் சகாதேவன் நிலக்ஷன்

(ஊடகத்துறை மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்,
முன்னாள் தலைவர், போசகர் - யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்)

*"என்னுடைய சாவால் எமது எதிர்கால மாணவர் சமுதாயம் நன்மையடையுமானால் எனது சாவில் நான் சந்தோசம் அடைவேன்"* - ச.நிலக்ஷன்.






புத்தகப் பையுடன் புறப்பட்ட புரட்சி தீரன்
செத்துவிட்டானென்ற செய்தி அது பொய் கேளீர்!
எத்திக்கும் தமிழ்ச் சிறார் வாயில்
உத்தமன் அவன் நாமம்
ஒலித்திடவே கேட்கின்றோம்
தித்திக்கும் தீந்தமிழில்
சிந்திடும் அவன் பேச்சு
எத்திக்கும் கேட்கிறது
எம் தமிழர் தாயகத்தில்...!
கத்தி விளிம்பில் சிறார்கள்
கல்விக்காய் நடக்கையிலே
கலங்கி நின்ற இந்துவின் புத்திரனே
நித்தியம் தவறாது - பள்ளி
முத்துக்களின் துயர் நினைத்தாய்
தத்துவம் வகுத்துத் தந்தாய்
தமிழ் மாணவர் ஒன்றியத்தை
பத்திரிகை நடத்தி பாரில் நம் மாணவர்க்கு
முத்திரை குத்த முனைந்த முதல்வனுனை
பத்திரிகையில் பதிக்க வைத்த
படு பாதகச் செயலால் நொந்தோம்
சத்தியன் உன்மீது சத்தியம் செய்கின்றோம்!
சாவிலும் நீ எம்மோடு வாழ்கின்றாய்
உத்தமன் நீ சாகவில்லை
உயிர் வாழ்வாய் என்றும்
எம் மனதில்........!



**கல்விச் சமூகம்,**
**வட மாகாணம்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிவ

தேசிய மட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்கு பெருமை சேர்த்த யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியினரையும், ஆண்கள் பிரிவில் ஐந்தாம் இடத்தைப் பெற்ற யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அணியினரையும்

மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(64736)

கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
சண்டிலிப்பாய்க் கோட்டம்.



## PERSONAL CLASS (A/L)

Combined Maths
Teacher:- V.Ragulan
1 month - 10 classes - 1000 Rs.
1 Class= 1.5 Hours

(64809)

தொடர்புகட்கு:-
சனிக்கிழமை (8- 10) a.m
Address:- 732, Hospital Road, Jaffna.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 . 07 . 1937



உதிர்வு 26 . 08 . 2006

### திருமதி செல்லையா இரத்தினம்

திதி: பூர்வபக்க திருதியை 14.09.2007

ஆண்டொன்று சென்றது அம்மா!
ஆறவில்லை எம் துயரம் அம்மா!
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன
அம்மா உங்கள் அன்பைப் போல் வருமா!
பாரினில் நாங்கள் பாங்குடன் வாழ
பாசத்துடன் எம்மை வழி நடத்தினீர்கள் அம்மா!
உங்கள் இனிய நினைவுகள் என்றும்
எம்மை விட்டு நீங்காது அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(53673)

"விமன்புலம்",
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் வல்லி சின்னராசா
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்)

திதி: திருதியை 14.09.2007



அமரர் சின்னராசா இரத்தினசிங்கம்
(முன்னாள் முகாமையாளர் நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)

திதி: துதியை

மலர்வு 14.07.1938 உதிர்வு 26.08.2006

மலர்வு 16.09.1971 உதிர்வு 25.08.2006

ஓராண்டு கடந்தாலும் நீங்கள் என்றும் எங்களுடனேயே!

பன்னிரண்டு திங்கள் பறந்தோடியது அப்பா!
கண்ணிரண்டும் இமைகாப்பது போல் எமைக்காத்தாய்!
விண்ணகம் உன்னை விரைவாய் அழைத்ததேனோ...?
மண்ணகத்தில் எம் வாழ்வு மலைபோல் சாய்ந்ததப்பா!
எண்ணத்தில் எந்நாளும் உன் நினைவால் எங்கள்
கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீர் துடைத்து
இன்னல் போக்கி இனியொருமுறை வாராயோ...?

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்திருக்கும் உம்முறவால்
நினைவிழக்க மாட்டாமல்
நீந்துகின்றோம் கண்ணீரில்...!
மரமிருக்கும் நாள் வரையில்
நிழலிருக்கும் பூமியிது
நாமிருக்கும் நாள் வரையில்
நீர் இருப்பீர் உடன் பிறப்பாக...!

உங்கள் ஆத்மாசாந்தியடைய தில்லையம்பதி
ஸ்ரீ சிவகாமி அம்பாளின் பாதங்களைப் பணிகின்றோம்.

140/32 A, தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(64805)

குடும்பத்தினர்.


## நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

குருநகர், செப்.14

குருநகர் பகுதியில் நுளம்புப் பெருக்கத்தை இல்லாதொழிக்க யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

குருநகர் மத்தியூஸ் வீதியில் உள்ள வடிகால்கள் சுத்திகரிப்புப் பகுதியில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய வடிகாலும் நாளாந்தம் சுத்திகரிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-51)


## முதலாம் ஆண்டு நினைவுகள்

மண்ணில் 09 . 06 . 1930



விண்ணில் 14 . 09 . 2006

திருமதி
### செபஸ்தியாம்பிள்ளை மரியம்மா

ஆண்டு ஒன்று மறைந்து விட்டாலும்
ஆழ் மனதில் அன்புமுகம் மறைந்திடவில்லை அம்மா!

831, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(64733)

குடும்பத்தினர்.



# COMPUTER COURSES

New Batches Start on
Batch 1 : 14.09.2007
Batch 2 : 15.09.2007
Batch 3 : 23.09.2007
Batch 4 : 24.09.2007
at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சாவதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



Diploma in Microsoft Office 2000/-
Diploma in Desk Top Publishing 2000/-
Diploma in Internet Technology 3000/-
Diploma in Hardware Technology 4000/-
Diploma in Computer Programming 6000/-
Diploma in Eng. Drawing & AutoCAD 5000/-
Diploma in Computerized Accounting 4000/-

Adobe PageMaker
Adobe Premiere
Adobe Photoshop
Corel DRAW
Macromedia Flash
VB .NET
Java
C/ C++

இக்கட்டணச் சலுகை இப்பிரிவுக்கு மட்டுமே !

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
# 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk



## கண்ணீர் அஞ்சலி



கடந்த 10.09.2007 அன்று கனடாவில்
சிவபதமடைந்த எனது மைத்துனரும்
பெருமதிப்பிற்குரியவருமான

### அப்பையா மகாலிங்கம்

(பிரபல வர்த்தகர், கந்தையா கடை,
விநாயகர் ஸ்ரோர்ஸ், புத்தளம்)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற நல்லூர் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கோ.சிதம்பரநாதன் (மைத்துனர்).

இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(64823)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தும் உத்திகள்

சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் தற்போது இடம் பெற்றுவரும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆறாவது கூட்டத்தொடரை ஒட்டி, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருக்கும் சில கருத்துகள் முக்கியமானவை.

உலகில் மனித உரிமைகள் மீறப்படும் பத்து நாடுகளை இந்தக் கண்காணிப்பகம் பட்டியலிட்டிருக்கின்றது. அதில் இலங்கையும் அடக்கம். பர்மா(மியன்மார்), புரூண்டி, சீனா, கொங்கோ குடியரசு, ஈரான், ஈராக், சோமாலியா, உஸ்பெக்கிஸ்தான், ஸிம்பாப்வே ஆகியவை ஏனைய நாடுகள்.

கடந்த வருடம் வரை *'ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு'*வாக இயங்கிவந்த ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பு, இப்போது *'ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸில்'* ஆகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றது.

'ஆணைக்குழு'வாக இயங்கிவந்த காலத்தில் திரும்பத் திரும்ப இழைத்த அதே தவறை, இப்போது 'கவுன்ஸில்' ஆகச் செயற்படத் தொடங்கிய பின்னரும் இந்த அமைப்பு இழைக்கக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வற்புறுத்தியிருக்கின்றது.

பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடுகளுக்கு எதிராக இந்த ஐ. நா. அமைப்பு வெறும் கண்டனத் தீர்மானங்களை அவ்வப்போது நிறைவேற்றி வருவதில் அர்த்தமில்லை. அவ்வாறான தீர்மானங்களை மனித உரிமை மீறல்களில் மோசமாக ஈடுபடும் நாடுகள் பொருட்படுத்துவதேயில்லை. ஆகவே உலக நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் ஆக்கபூர்வமான திட்டங்களையும் செயற்பாடுகளையும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இனிமேலாவது முன்னெடுக்க வேண்டும் - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியிருக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயத்தைக் கையாள மனித உரிமை அமைப்புகள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் விதத்திலான தீர்மானம் ஒன்றை ஐ. நா. கவுன்ஸிலில் நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை கடந்த வருடம் செப்டெம்பரிலும், அதற்குப் பின்னர் இவ்வாண்டு முற்பகுதியிலும் இடம்பெற்ற கவுன்ஸிலின் கூட்டத் தொடர்களில் ஐரோப்பிய ஒன்றியத் தரப்பினால் பிரேரிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு தடவையும் இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது அவற்றைத் தடுத்து வெற்றிகரமாக முறியடிப்பதற்கான காய்நகர்த்தல்களையும் கொழும்பு செய்து வருகிறது என்பது கண்கூடு.

கடந்த தடவை இதேபோன்ற தீர்மானம் ஒன்றை ஐ. நா. கவுன்ஸிலில் நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, இலங்கையில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்களை விசாரணை செய்ய தனியான ஓர் ஆணைக்குழுவை நியமிக்கவும், அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிக்க சர்வதேச பிரமுகர்களை அழைக்கவும் இலங்கை ஜனாதிபதி தயார் என்று பெரும் ஆரவார அறிவிப்பை இலங்கை விடுத்து, ஐ. நா. கவுன்ஸிலின் தீர்மான முயற்சியைத் தள்ளிப் போட வைத்தது. ஆனால், அந்த ஆணைக்குழுவும் கண்காணிப்புக் குழுவும் உருப்படியாக எதுவுமே செய்யவில்லை.

இப்போதும், அதுபோன்ற தீர்மானத்தை நிறைவேற்றச்செய்யும் எத்தனங்கள் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் எடுக்கப்படும்போது, மனித உரிமைகளுக்கான ஐ. நா. தூதர் ஆர்பர் அம்மையார் மற்றும் சித்திரவதைகள் குறித்து ஆராயும் ஐ. நா. விசேட தொடர்பாளர் ஆகியோர் அடுத்த மாதத்தில் நேரடியாக இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு இலங்கை அரசு 'பெருமனது பண்ணி' அழைப்பு விடுத்திருப்பதை ஒரு துரும்புச் சீட்டாகத் தூக்கிப் போடுகின்றது கொழும்பு. மனித உரிமைகள் விடயங்களுக்குப் பொறுப்பான ஐ. நாவின் மூத்த - உயர் - அதிகாரிகள் இருவரும் நேரில் வந்து இலங்கை விடயங்களை நேரடியாகக் கண்டறிய முதல், ஐ. நா. கவுன்ஸில் ஒரு தீர்மானத்துக்கோ, முடிவுக்கோ வருவது தவறானது என்ற அடிப்படையில் ஜெனிவாவில் தனது பிரசாரக் காய் நகர்த்தல்களை முன்னெடுக்கின்றது கொழும்பு.

கொழும்பு அரசின் இராஜதந்திர நகர்வுகளுக்கு மத்தியில், தற்போது நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியங்கள் மிகமிகக் குறைவு என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

அதனால், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து அதிகம் சிரத்தை கொண்டுள்ள தரப்புகள், இந்தக் கூட்டத் தொடரை இலங்கைத் தரப்புகள் மீது மனித உரிமைகளைக் கட்டாயம் பேணச் செய்யத் தூண்டுவதற்கான சர்வதேச அழுத்தத்தை முழு அளவில் பிரயோகிக்க வைக்கும் ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்து, அதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. அதேசமயம், இலங்கை போன்ற நாடுகளுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதன் வாயிலாக இத்தகைய நாடுகளில் மோசமாக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்ற சர்வதேச தீர்ப்பை வெளிப்படுத்தலாமே தவிர, மனித உரிமை மீறல்கள் இந்நாடுகளில் இடம்பெறாமல் தடுக்க அவை பெரிதும் உதவப்போவதில்லை என்று கருதும் - இவ்விடயத்தில் சிரத்தை உள்ள - தரப்புகள், இதற்காக வேறு மார்க்கத்தை நாட விரும்புகின்றன.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கண்காணித்து, கவனத்தில் எடுத்து, விசாரித்தறியும் சர்வதேச கண்காணிப்புப் பொறிமுறை ஒன்றை இலங்கையில் நிறுவ வேண்டும் என சர்வதேச சமூகத்தைக்கொண்டு வலியுறுத்தி, அந்தச் செயற்பாட்டை மேற்கொள்ள வைப்பதில் இந்தத் தரப்புகள் முனைப்பாக உள்ளன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச்சபை போன்றவை சர்வதேச கண்காணிப்புத் தரப்புகளை இலங்கையில் அனுமதிக்க வேண்டும் என்ற புதிய வற்புறுத்தலை - பிரசார உத்தியை - முன்னெடுத்திருப்பதன் பின்னணி இதுதான்.

இந்த முயற்சியில் இத்தரப்புகள் எவ்வளவு தூரம் வெற்றி காணும் என்பதை இந்த மாத முடிவில் ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் முடிவுறும் சமயத்தில் நாம் மதிப்பிட முடியும்.

# வடமராட்சியில் நேற்று நாள்முழுவதும் ஆழிப்பேரலைப் பீதியும் பதற்றமும்

## பாடசாலைகள் இயங்கவில்லை

உடுப்பிட்டி,செப்.14

ஆழிப்பேரலை எச்சரிக்கையை அடுத்து வடமராட்சியின் கரையோரப் பகுதிகளில் நேற்றும் பதற்றநிலை காணப்பட்டது.

இந்தோனேசியா, சுமத்திராத் தீவில் நேற்றுப்பகலில் இரண்டு தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டசெய்தி அறிந்து கரையோரப்பகுதிமக்கள்தமதுஇருப்பிடங்களில் இருந்து தூர இடங்களுக்குச் சென்று தங்கினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. படையினரும் கரையோரப் பகுதிகளில் உள்ள தமது காவலரண்களில் இருந்து உள் பக்கம் வந்திருந்தனர். கரையோரப் பிரதேசம் நேற்று முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

தொண்டைமானாறு முதல் கெருடாவில், மயிலியதனை, சின்னமலை ஏற்றம், ஊரிக்காடு, ஆதிகோயிலடி, உதயசூரியன்கடற்பகுதி, வல்வெட்டித்துறை, ஊறணி, பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி, சுப்பர்மடம், பருத்தித்துறை முனைக்கடற்கரை போன்ற இடங்களில் உள்ள மீனவர்கள் எவரையும் பாதுகாப்புப் படையினர் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

வடமராட்சி கரையோரப் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. அதே வேளை கடற்படையினரின் ரோந்துப் பணியும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாகவும் கடல் கலங்கிய செம்மண் நிறத்திலும் காணப்பட்டன. மேற்படி அறிகுறியே முன்பு ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போதும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-155)

**இராணுவப் புலனாய்வாளர் நால்வரை**

# அடையாள அணிவகுப்பிற்கு நிறுத்துமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு

சாவகச்சேரி,செப்.14

கைதடிப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான இருவரின் மரணம் தொடர்பாக கைதடி இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நான்கு பேரைக்கைதுசெய்து அடையாள அணிவகுப்பிற்கு முற்படுத்துமாறு சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் தலைமையகப் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்தமாதம் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான முருகேசு ராஜ்கண்ணன், சண்முகலிங்கம் சித்திரவேல் ஆகியோரின் மரணவிசாரணை நடைபெற்றபோது சம்பவத்தினை நேரில் கண்டவர்களின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டே புலனாய்வுத் துறையினரை கைதுசெய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். புலனாய்வுத்துறையினரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க விடுத்த கட்டளையின் பிரதி வடமாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறிக்கு உரிய நெறிப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

இதேவேளை பொலிஸாரால் நடத்தப்படவுள்ள அடையாள அணிவகுப்புக்கு சாட்சிகளை நெறிப்படுத்த நீதிமன்றுக்கு வருமாறு அப்பகுதி கிராம அலுவலர்களான எஸ்.ரவீந்திரன், எஸ்.ரூபசிங்கம் ஆகியோருக்கு விடுத்த கட்டளையை இரத்துசெய்யுமாறு இரு கிராம அலுவலர்களும் நீதிவானிடம் கோரி இருந்தனர். அந்தக் கோரிக்கையினை நீதிமன்றம் நிராகரித்தது. நீதிமன்றுடன் ஒத்துழைக்குமாறும் தவறின் அரச அதிபர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (அ)

# ஐந்து ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் அவமதிப்புக் குற்றச்சாட்டு

**இன்று உடனடி விளக்கம் தருமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு**

கொழும்பு, செப். 14

நேற்று ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்த, ஐந்து தொழிற்சங்கங்களினதும் நிர்வாகிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுக்காக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அதை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகித் தெரியப்படுத்தும்படி அந்தத் தொழிற்சங்க நிர்வாகிகள் ஐவருக்கும் உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இது தொடர்பான நீதிமன்ற உத்தரவை சம்பந்தப்பட்ட ஐவருக்கும் உடன் கிடைக்கச் செய்யும்படி பொலிஸ் மா அதிபரையும் உயர் நீதிமன்றம் நேற்றுப் பணித்தது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை விடுத்திருக்கின்றது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியை ஐந்து ஆசிரிய தொழிற்சங்கங்கள் புறக்கணித்து வருகின்றமை தெரிந்ததே.

இந்த நடவடிக்கைகளை ஆட்சேபித்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய - அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த - மாணவர் ஒருவர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியைத் தடுப்பதற்கான நடவடிக்கை எதிலும் மேற்படி ஐந்து தொழிற்சங்கங்களும் ஈடுபடக்கூடாது எனத் தடைவிதிக்கும் உத்தரவு ஒன்றைக் கடந்த 6 ஆம் திகதி பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் இவ்விவகாரத்தை ஒட்டி, ஆசிரியர்களை நேற்று ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு மேற்படி ஐந்து தொழிற்சங்கங்களின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. பல இடங்களில் ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்பும் இடம்பெற்றது.

இச்சமயத்திலேயே மேற்படி மாணவரின் மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.(சி)

## வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்றுச் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, செப். 14

வாழைச்சேனை பொதுச்சந்தையில், பிரதான வீதியில் வைத்து ஈ.பி.டிபி உறுப்பினர் ஒருவர் நேற்று முற்பகல் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை ஈ.பி.டி.பி. அலுவலகத்தைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை இளையராசா (வயது - 21) என்பவரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனைப் பொதுச்சந்தைப் பகுதியில் இவர் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஒட்டோவொன்றில் அங்கு வந்த இனம் தெரியாத ஆயுதபாணிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்திற்கு ரி - 56 ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (சி)

## யாழ். மத்தி சமித்தியில் விநாயகர்சிலை பிரதிஷ்டை

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ். மத்தி சத்திய சாயி சேவா நிலையத்தில் ஸ்ரீ சாயி கணபதி பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

நாளை நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வில் வாழ்நாள்பேராசிரியர் பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ண ஐயர், சத்தியசாயிசேவா நிலையத்தின் வடபிராந்தியத் தலைவர் ஆர்.வசந்தசேனன், நிலையத்தின் இணைப்பாளர் கே.மகேஸ்வரன் ஆகியோரின் ஆசியுரையும் வைத்திய கலாநிதி க.சிவநேசனின் சிறப்புரையும் இடம்றெும். (அ-1)

## வவுனியாவில் கிளைமோரில் தாக்குதல் மின்மாற்றி சேதம்

கொழும்பு,செப்.14

வவுனியா, முதலியார் குளப் பகுதியில் நேற்று அதிகாலை 2.40 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் மின்மாற்றி ஒன்று சேதமடைந்திருக்கிறது.

இதனால் அப்பகுதி மின்விநியோகம் தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளது. சம்பவத்தின் பின்னர் அப் பகுதியில் படையினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 29 | சனிக்கிழமை 15.09.2007 |
| திதி : | சதுர்த்தி பி.இ. 01.03 |
| நட்சத்திரம் : | சித்திரை காலை 06.04 |
| சுபநேரம் | : 03.03 - 04.33 |
| இராகுகாலம் | : 09.03 - 10.33 |

## நீண்டதுயர் நீங்கிடவே கொடியேற்று!

வண்ணையிலே கோயில் கொண்ட வேங்கடேசா!
வரத ராசப் பேருடைய ரங்கநாதா!
மண்மகளும் மலர் மகளும் தீண்டும் பாதா!
மலரடியால் உலகளந்த வாமன தேவா!
பாண்டவர்காய் தூது சென்ற பாண்டுரங்கா!
பாரதப் போர் முடித்த இருஷி கேசா! - எம்
நீண்ட துயர் நீங்கிடவே கருடன் ஊர்ந்து
நின் கொடியை ஏற்றுவாயே கருணை கூர்ந்து!

- கா. கார்த்திகேசு, நல்லூர்.

(வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயக் கொடியேற்றம் இன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை அச்சத்தினால் நேற்றும் மக்கள் இடம்பெயர்வு

## மட்டக்களப்பில் வழமைக்குமாறாக அதிகளவு மீன்கள் கரைக்கு

கொழும்பு, செப். 14

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவில் நேற்றும் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக இலங்கையின் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் நேற்றும் இடம்பெயர்ந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த இந்த மக்கள் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

நேற்று முன்தினம் இரவு ஆழிப்பேரலை தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் நேற்றுக்காலை மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். ஆனால் மீண்டும் நேற்றுக் காலையில் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அவர்கள் மீண்டும் இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இவர்கள் தற்போது மெல்ல மெல்ல தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்ற போதிலும் அனேகமானவர்கள் திரும்புவதற்கு அச்சமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை கல்லாறு, நீலாவணை, மருதமுனை மற்றும் பாண்டிருப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் மீண்டும் இடம்பெயர்ந்து சம்மாந்துறை, நற்பிட்டி முனை மற்றும் அம்பாறை நகர் போன்ற இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

*2004 ஆம் ஆண்டைப் போன்று...*

மட்டக்களப்பு மாவட்டத்திலும் காத்தான்குடி உள்ளிட்ட பல இடங்களைச் சேர்ந்த கரையோர மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இங்கு மாகாணக் கடற்கரைப்பகுதிகளில் கடந்த சில தினங்களாக வழமைக்கு மாறாக அதி களவு மீன்கள் கரை வந்து சேர்கின்றன என்று மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு டிசம்பரில் அனர்த்தம் ஏற்படுவதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்னரும் இதேபோன்றே மீன்கள் பிடிபட்டன என்று அவர்கள் கூறுகின்றனர். இதனால் மக்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர். எந்நேரமும் ஆழிப்பேரலைகள் தாக்கலாம் என்ற பீதி தொடர்கின்றது.(சி)

## நேற்றைய பல்வேறு விபத்துக்களில் 50 பேர்காயம்

நாட்டின் சில பகுதிகளில் நேற்று இடம்பெற்ற வீதிவிபத்துச் சம்பவங்களில் ஐம்பதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருக்கின்றனர். ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கொழும்புகாமம் வீதியில் - நிவித்திகலைக்கு அண்மையில் - நேற்றுக்காலை 6.15 மணியளவில் சுமார் அறுபது பயணிகளுடன் வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று நாற்பது அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் பஸ் சாரதி, நடத்துனர் மற்றும் பாடசாலை மாணவர் நால்வர் உட்பட 38 பேர் காயமடைந்திருக்கின்றனர்.

## அரசியல் தீர்வு....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

உரையாற்றுகின்றார்.

பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றும் தலைவர்கள் அக்கூட்டத்துக்குப் புறம்பாக,அங்கு வந்துள்ள ஏனைய தலைவர்களோடு தனித்தனிச் சந்திப்புகளிலும் கலந்தாலோசனைகளிலும் ஈடுபடவிருக்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இவ்வாறு பல தலைவர்களோடு தனியான சந்திப்புகளில் ஈடுபடவிருக்கின்றார்.

அந்த வகையில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் தனியான சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது.

அப்போதே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தாம் மனதில் கொண்டுள்ள யோசனைத் திட்டத்தின் நகலை - எழுத்தில் - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ நேரில் ஒப்படைப்பார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

'ஒற்றையாட்சிக்குள் அதிகளவான அதிகாரப் பரவலாக்கம்' என்ற அடிப்படையிலான தமது திட்டத்தின் விவரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஇந்தியப் பிரதமரிடம் கையளித்து விளக்குவார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## தமிழக முதல்வர்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அமைப்பு கோரியுள்ளது.

அதனை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் கருணாநிதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தகவல் தெரிவித்தன. (அ-5)

## கஞ்சிகுடி.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இத் தாக்குதலில் இரு சிறப்பு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இந்த மோதலின்போது விடுதலைப் புலிகளுக்கு எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை என்றும்-

இதேவேளை- நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் 8 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இளந்திரையன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத்தாக்குதல்சம்பவம் தொடர்பாக படைத்தரப்பு தகவல்கள் எவையும்நேற்றிரவு வரை வெளியாகவில்லை. (சி)

## புதுக்குடியிருப்பில்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இங்கும் சிதறி பாதுகாப்புத் தேடி ஓடினர். எங்கும் ஒரே அல்லோல கல்லோலமாக இருந்தது. மாணவர்கள் சிலர் அச்சத்தால் மயங்கிய நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்று க.பொ.த. உயர்தர சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களின் செயன்முறைத் தேர்வுகள் நடைபெறவிருந்தன.

புதுக்குடியிருப்பு வேணாவில் பாடசாலைக்கு அண்மையிலும் குண்டுகள் வீழந்ததால் பாடசாலைக் கட்டடங்கள் சில சேதமடைந்தன. பாதுகாப்புத் தேடி மாணவர்கள் சென்றதால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. இத் தாக்குதலில் 13 வயது மாணவர் ஒருவன் சிறு காயங்களுக்கு ஆளானான்.

இதே வேளை-

நேற்றுமாலை 6.30 மணியளவில் முல்லைத்தீவு கரையோரப்பகுதி மீது 'மிக் - 27' விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன. பின்னர் 7 மணியளவில் 'எம்.ஐ. 27' ரக ஹெலிக்கொப்டர்கள் அதே பகுதியில் தாக்குதலை மேற்கொண்டன. சேதவிவரம் தெரியவில்லை.

இதேவேளை, புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் தளம் ஒன்றை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டதாக விமானப்படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டீ சில்வா கூறினார். (அ-5)

## யாழ்ப்பாணத்துக்கு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார்.

தேசியமட்டப் போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு பலாலி படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.எ.சந்திரசிறி வெற்றிக் கேடயம் வழங் கிக் கௌரவித்துள்ளார். பலாலி படைத் தலைமையகம் நேற்றிரவுவிடுத்த செய்திக் குறிப்பில்இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிவாகை சூடி யாழ். குடாநாட்டிற்குப் பெருமை தேடித்தந்த மாணவிகள், தமது கல்லூரி அதிபர் மற்றும் பயிற்சி ஆசிரியர்களுடன் மேலுள்ள படத்தில் காணப்படுகின்றனர். (அ-1-86)

## விடுதலையான ....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

முதலில் வாகனத் திருத்தும் இடம் அருகே 74 வயதான நெடுமாறன் உண்ணாநிலைப் போராட்டம் நடத்த முயற்சிக்கப்பட்டது. ஆனால், தமிழக பொலிஸார் அனுமதியளிக்கவில்லை. உண்ணாநிலைப் போராட்டப் பந்தலை பொலிஸார் பிரித்தனர். இது தொடர்பில் தமிழின உணர்வாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனை 'சண்' தொலைக்காட்சியினர் படம் பிடித்தனர். இதனையடுத்து 'சண்' தொலைக்காட்சியினரை பொலிஸார் தாக்கியுள்ளனர். இதனால் பொலிஸாருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அங்கிருந்து பொலிஸார் வெளியேறினர். ஊடகவியலாளர்களைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி மன்னிப்புக் கோரினார்.

மறுலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் கோ.க.மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன், பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன், தமிழர் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் தியாகு, தமிழ்நாடு அன்னையர் முன்னணியின் அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி, சமூக நீதிக் கட்சியின் தலைவர் ஜெகவீரபாண்டியன், இயக்குநர் சீமான் உள்ளிட்டோர் நெடுமாறனை நேரில் சந்தித்துப் பேசினர்.

கடந்த 2 நாட்களாக நெடுமாறன் தொடர்ந்து உண்ணா நிலையில் இருந்து வருவதால் சோர்வடைந்துள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன. நெடுமாறனுக்கு இரத்த அழுத்தப் பரிசோதனை யும் மேற்கொள்ளப்பட்டது.

உண்ணாநிலைப் போராட்டம் நடத்துவதால் உடல்நிலை பாதிக்கப்படும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்திய போதும் அதனை ஏற்க நெடுமாறன் மறுத்துவிட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது உண்ணாநிலைப்போராட்டம் நடைபெறும் வளாகத்திற்கு வெளியே பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுள்ளனர். (சி)

## மரண அறிவித்தல்கள்



### செபமாலைமுத்து றெஜினோல்ட்

(மக்கள் வங்கிபிராந்திய முகாமையாளர்-வவுனியா)

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செபமாலைமுத்து றெஜினோல்ட் நேற்று (13.09.2007) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலைமுத்து மற்றும் றீற்றம்மா தம்பதியரின் மகனும் காலஞ் சென்ற நாகலிங்கம்-மரியம்மா தம்பதியரின் மருமகனும் டெனிஸ்ராவின் அன்புக் கணவரும் அனஸ்ரா (ஒஸ்ரியா), அன்று (ஒஸ்ரியா), பெனிற்றா(ஒஸ்ரியா), பீற் (ஒஸ்ரியா), கனிஷ்ரா (ஒஸ்ரியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் றூபி, றொபின், றொபேட், றிச்சேட் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.14, பென்றிக்கோஸ்லேன்,*
*யாழ்ப்பாணம்.*
*0776906624.*
**கொழும்பு: 0115843413, 0779231985.**

தகவல்:
றூபி (சகோதரி).

### திருமதி சண்முகராசா ரத்தினேஸ்வரி

குமரகோட்டம், கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி சண்முகராசா ரத்தினேஸ்வரி நேற்று (13.09.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செ. சண்முகராசாவின் அன்பு மனைவியும் சுமதி, சாய்குமார், கோமதி, திருக்குமார், கௌரி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.*

தகவல்:
செ. சண்முகராசா (கணவர்).

### திருமதி மகாலிங்கம் ராஜேஸ்வரி (ராசக்கா)

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி மகாலிங்கம் ராஜேஸ்வரி நேற்று (13.09.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பாலரஞ்சினி, தயாநிதி, கஜமுகன் (ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறைவேற்று அதிகாரி), நளாயினி, பிரகாஸ், சர்மினி, சர்மிலா, துயன் ஆகியோரின் அன்புத் தாயும் பரமநாதன், பகிரதன், ராஜேஸ்வரி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற செபமாலை, காலஞ்சென்ற ஞானமலர், ராசபூபதி, ராஜரட்ணம், தியாகராசா ஆகியோரின் சகோதரியும் சிங்கராசா, தர்மராசா, சந்திரலேகா, ரத்தினராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சி.டி.எம். வீதி,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
கஜமுகன் (மகன் -
நிறைவேற்று அதிகாரி,
ஜனசக்தி இன்சூரன்ஸ்).


## திருமண வைபவம் ஒத்திவைப்பு

*எதிர்வரும் 16.09.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 6.20 மணிமுதல் 8.00 மணிவரையிலான சுபவேளையில்*
**வ. துவாரகன் அவர்களுக்கும்**
**யசோதா அவர்களுக்கும்**
*கொக்குவில் மஞ்சவனப்பதி கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருந்த திருமண வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.*

(64854)

தகவல்:
*திருமதி பவளம் வடிவேலு,*
*கட்டுடை, மானிப்பாய்.*

திரு. திருமதி குணசீலன் சந்திராதேவி,
பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### வல்லிபுரம் சரஸ்வதி

**தாயின் மடியில்:**
**10.01.1950**

**ஆண்டவன் அடியில்:**
**15.08.2007**

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.*

*மில்லேன்,*
*மல்லாகம்.* (64849)

**- குடும்பத்தினர்.**

**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பம்!

**S.L.A.S.**
பரீட்சைக்கான வகுப்புகள்
ஒவ்வொரு ஞாயிறும் 11 மணியிலிருந்து 2 மணிவரை நடைபெறும்.
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு.

**வணிகக்கல்வி**
V.K. ரவிகரன் B.Com.
A/L 2008
Sat., Sun 8 - 9 a.m.
A/L 2009
Sat., Sun 9 - 10 a.m.
ஆரம்பம்: 15.09.2007

**இணைந்த கணிதம்**
Mr. N.C. 
* PHY. Mr. K. செல்வன்
* CHE. Mr. M.A. நிரோஜன்

**சிங்களம்**
Sat., Sun 4 p.m.
Mr. K.R. 
SHAMROCK

**புவியியல்**
N. பாபு (B.A. (Geo. Spl)
PAPER CLASS
Sat., Sun 10 - 11 a.m.
A/L - 08 மானிடப் புவியியல்
Tue., Thur. 4.15
A/L - 09 
Tue., Thur. 3.15

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்.

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.